★ ★ ★

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.


# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (16-11-66) இதழ் 276

ஷஃபான் 2 கார்த்திகை 1 புதன்கிழமை




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14


# சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்படுமா?

## "சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வோம்"

### கம்யூனிஸ்ட்கட்சி (சீனசார்பு) தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரத்தில் 18-ம் திகதி ஆரம்பமாகும் சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சீன சார்புடைய கம்யூனிஸ் கட்சியும் கலந்து கொள்ளும்.

ஐக்கிய முன்னணியின் கட்டுப் பாட்டின் கீழ், சிறுபான்மை தமிழரின் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வதென இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேச கமிட்டி நேற்று தீர்மானித்துள்ளது.

தனிப்பட்ட சங்கங்களின் மூலமும், சத்தியாக்கிரகம் மூலமும், தீண்டாமையை யொழிக்க முடியாதென்பது கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாக இருந்த போதிலும், சிறுபான்மை தமிழர்களின் உரிமைப் போரில் பங்குபற்றுவது அவசியமாக இருக்கிற படியால் சத்தியாக்கிர கட்டுப்பாட்டுடன் கலந்து கொள்வார்களென்றும் கத்தில் பங்குபற்றுவதாக, யாழ். பிரதேச கமிட்டி செயலாளர் திரு. வி. ஏ. கந்தசாமி, கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்தியாக்கிரக போராட்டத்தில் கட்சி அங்கத்தவர்கள் அவர் தெரிவித்தார்.

சத்தியாக்கிரக போராட்டத்திற்கு பூரண ஆதரவு அளிப்பதெனவும், போராட்டத்தில் கலந்து கொள்வதெனவும், கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### ஆதரவு

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்தியாகிரகப் போராட்டத்திற்கு பூரண ஆதரவளிப்பதென நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கூடிய, இலங்கை வாலிபர் சங்க சம்மேளன யாழ். பிரதேசகிளை தீர்மானித்துள்ளது.

## சிறுபான்மைத்தமிழர் தலைவர்கள் தமிழரசார் சமரசப்பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர், தீண்டாமையை ஒழிக்கும் நோக்கத்துடன், இம்மாதம் 18-ந் திகதி ஆரம்பிக்கத்திட்டமிட்டுள்ள சத்தியாக்கிரக இயக்கம் பெரும்பாலும் ஒத்திவைக்கப்படலாமென்று ஐக்கிய முன்னணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இதே சமயம சத்தியாக்கிரக இயக்கத்தை ஒத்திவைக்கச் செய்வதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று மாலை தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களுக்கும் ஐக்கிய முன்னணித் தலைவர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இன்றும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன.

ஜாதிப்பாகுபாட்டை ஒழிக்கும் நோக்கத்துடன் சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணியினர் இம்மாதம் 18-ந்திகதிவெள்ளிக் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள சத்தியாக்கிரக இயக்கத்தை ஒத்திவைத்து சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீண்டாமை ஒழிப்புக்கு நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த முயற்சியின் ஓர் அம்சமாக தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களுக்கும் இடையில் நேற்றுமாலை பேச்சுவார்த்தை நடைபெற்றது, சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இன்றும் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. இன்று மாலை சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர்கள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு-வேர்ணன் அபயசேகராவையும் சந்திக்க விருக்கின்றனர்.

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் அழைப்பின் மீது ஐக்கிய முன்னணித் தலைவர்களுக்கும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களுக்குமிடையில் நேற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. கோப்பாய் எம். பி. திரு. சி.கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தைகளில் திரு. அமிர்தலிங்கம். சாவகச்சேரி எம்.பி.யும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்குழு இணைச்செயலாளருமான திரு.வி.என். நவரெத்தினம் திரு. கதிரவேற்பிள்ளை, செனட்டர் எஸ்.நடராசா ஆகியோரும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களான திரு. எம். ஸி. சுப்பிரமணியம், முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா, முன்னாள் யாழ்ப்பாண உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரை ஆகியோரும் இப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டனர், பிற்பகல் நாலு மணியளவில் ஆரம்பமான பேச்சுவார்த்தை இரவு

(8-ம் பக்கம் பார்க்க)

## குழந்தையைக் கொன்று தானும் தற்கொலை

### இளம் பெண்ணின் பரிதாபமுடிவு

மாவிட்டபுரம், செவ்.

இளம் பெண் ஒருவர் தனது ஒருவயதுடைய குழந்தைக்கு நச்சுத்திராவகம் பருக்கி கொலை செய்து தானும் அதனை அருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று நேற்று மாலை அச்சுவேலியிலுள்ள பத்தைமேனி என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

22 வயதுள்ள தவமணி தேவியின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின்போதே மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

காலஞ்சென்ற பெண் காங்கேசன்துறை பொலிசாருக்கும் தமது கணவனுக்கும், திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் எழுதி வைத்துள்ள கடிதங்களில் தமது முடிவுக்கு யாரும் பொறுப்பல்ல எனத் தெரிவித்துள்ளார். கணவனுக்கெழுதியுள்ள கடிதத்தில் தானும் குழந்தையும் அவருக்குப் பாரமாக இருக்கவிரும்பவில்லையென்றும் அவரை சந்தோஷமாக வாழும்படியும் தெரிவித்துள்ளார்.

தவமணிதேவியின் கணவர் வேலையற்றிருந்ததாகவும் இதன்காரணமாக அவர் தமது பெற்றோருடன் வீட்டில்இருந்து வந்ததாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி தவமணி தேவியின் மரணம் தற்கொலை யெனவும் அவரது குழந்தை கொலை செய்யப்பட்டதாகவும் தீர்ப்பளித்தார்.

## நீதியரசருக்கு விருந்து

யாழ்ப்பாணம், புதன்

நீதியரசர் வி. சிவசுப்பிரமணியத்திற்கு, யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் சங்கம் இம்மாதம் 26-ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு விருந்து வைக்கத் தீர்மானித்துள்ளது.

## சிறுபான்மையினருக்கு இடம் வேண்டும்

### மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைத் தமிழர் அங்கத்தவர் ஒருவர் கூடியதாக புத்தூர் கிராம சபைவட்டாரம் பிரிக்கப்பட வேண்டுமென புத்தூர்ப் பகுதி சிறுபான்மைத்தமிழர்கள் உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளார்கள். கோப்பாய்எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கும் இந்தமகஜரின் ஒரு பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது பற்றிநடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி தெரிவித்துள்ளார்.

## அடுத்த மாதம் மீண்டும் 'குட்டிப் பொதுத் தேர்தல்'

கொழும்பு, செவ்.

அடுத்த மாதம் மற்றுமொரு 'குட்டிப் பொதுத் தேர்தல்' நடைபெறவிருக்கிறது. இதற்கான பலப்பரீட்சையில் இறங்குவதற்கு எதிர்க்கட்சியினரும் ஆளும் கட்சியினரும் தயாராகின்றனர்.

முப்பது உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல்கள் அடுத்தமாதம் நடைபெறவிருக்கின்றது. இதே சமயம் தொடங்கஸ்லந்தை பாரிலிமெண்டரித் தொகுதி உபதேர்தலும் அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது இடதுசாரியினர் தமது பிரசாரத்தை பொருளாதாரப் பிரச்னைகளில் திருப்பத் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

## "சமுதாய சமத்துவத்தை உருவாக்க உழையுங்கள்"

### உலக பத்திரிகைகளுக்கு இந்திய ஜனாதிபதி அறிவுரை

புதுடில்லி, நவ. 15

சமுதாயசமத்துவம், உலக ஒற்றுமை ஆகிய பொதுவான லட்சியங்களை கருத்தில் கொண்டு பத்திரிகைகள் செயல்படவேண்டும் என்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று இங்கு ஆரம்பமான சர்வதேசப் பத்திரிகை பிரதிநிதிகளின் பேரவைக் கூட்டத்தில் கூறினார்.

மனித மனத்தை ஒருமுகப்படுத்தி உருவாக்கும் சக்தி பத்திரிகைகளுக்கு உண்டு. அந்த சக்தியை தியவர்களுக்குப் பயன்படுத்தாமல் உலகின் அமைப்புக்காகப் பயன் படுத்த வேண்டுமென்றுடாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்

கொலைகள், இனக்கலவரங்களை அவதூறுகளை ஏற்படுத்தும் போன்றகதைகளை எழுதாமல் சமுதாயத்தைநல்வழிப் படுத்தும் கதைகளையும் செய்திகளையும் பிரசுரிக்கும்படி அவர் பத்திரிகைகளை கேட்டுக்கொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்


**தேவை**

நெசவாளர்!

நெசவு வேலையில் அனுபவம் பெற்ற ஆட்கள் தேவை. உடன் நேரில் விண்ணப்பிக்கவும்:- "சித்ரா கைத்தறி நிலையம்", 244, நாவலர்வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம். 1493

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன்—வசுந்தராதேவி
நடித்த
**மங்கம்மா சபதம்**
(புதிய கொப்பி)

**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண
விஜயமும் காண்பிக்கப்படும்

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். -- சரோஜாதேவி
நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Alian Delon & Lea Massari
in
**Have I the right to Kill**


# "இன ஒற்றுமைக்கு சோவியத் உதாரணம்"

### உடுப்பிட்டி எம். பி. பேச்சு

குரும்பசிட்டி, செவ். "பாராளுமன்ற சரித்திரத்தில் சிங்கள எம்.பி. ஒருவர் தமிழ் மொழியில் மசோதாவைப் பிரேரித்துப்பேசிய சம்பவம் ஒன்று தற்போது நடைபெற்றுள்ளது. தமிழ் எம்.பி.க்களில் ஒருவனுகிய நான் இம்மசோதாமீது சிங்களமொழியில்பேசிதன்றியும் தெரிவித்துக் கொண்டேன். இது இன மக்களும் ஒற்றுமையாகப்பழகி அன்னியோன்னியமாக வாழ இச் சம்பவம் ஒரு சிறந்த அறிகுறியாகும். இலங்கையின் எதிர்காலச் சிறப்பிற்கு தேசிய ஒற்றுமை மிக அவசியம். வெவ்வேறு அரசியல் கொள்கைகளை உடையவர்கள் சோவியத் நாட்டின் சிறப்புப்பற்றிப்பேச ஒற்றுமைப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. உலகில் மிகக் குறுகிய காலத்திற்குள் சமூக அரசியல் பொருளாதாரத் துறைகளில் பின்தங்கிய நிலையிலிருந்து முன்னணிக்கு வந்த சிறந்த வல்லரசு சோவியத்யூனியன். உலகில் அமெரிக்கா, சோவியத்என இரு பெரிய வல்லரசுகள் உண்டு. இரு தேசங்களினதும் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை நாம் அறியவேண்டும். இவை நமக்குப் பெரும் முன்மாதிரியாக விளங்கலாம்."

குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்க திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற சோவியத் தேசிய தின விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசும்போது மேற்கண்டவாறுகூறினுர் லங்கா-சோவியத் நட்புறவுச் சங்க ஆதரவில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

திரு. சிவசிதம்பரம் மேலும் குறிப்பிட்டதாவது:—

'தொழில் நுட்ப அறிவு வசதிகளினுல் சோவியத் பெரும் செல்வம்கொழித்த நாடாகத் திகழ்கிறது. தேசம் சுபிட்சம் பெற நாட்டின் செல்வம் சமூக நியாயமாகப் பங்கிடு செய்யப்பட வேண்டும். அமெரிக்கா செல்வம் நிறைந்த தேசமாகவிளங்கினுலும் நீக்ரோ இனத்தவரின் உரிமைகள் மறுக்கப்பட்டு நசுக்கப்படுகின்றது. அந்நாட்டின் செல்வம் சமூக பங்கீடு செய்யப்படுவதில்லை. ஆனுல் சோவியத் இவ்வகையான நடைமுறையில் செல்வதால் இன, மொழி, சமயவேறுபாடுகள் இன்றி ஒற்றுமை நிலவுகிறது.

உலகிலுள்ள சிறுபான்மை இனத்தவர்களுக்கு சோவியத் சிறந்த எடுத்துக்காட்டு. எல்லா இன மக்களும் தமது பரம்பரையான மொழியைப் பாதுகாக்க, அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய வசதியுண்டு. லெனின்புரட்சிக்குப்பின் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கம் இன ஒற்றுமையில் முக்கிய கவனம் எடுத்தது. சிறுபான்மையினர் பெரும்பான்மை மக்களுக்குரிய சம வாழ்வு பெற்றுள்ளனர். இவ்வழியில் நமது நாடும் இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க முயற்சி எடுக்கவேண்டும்'.

இவ்விழாவில் இலங்கையிலுள்ள சோவியத் உதவி ஸ்தானிகர் திரு. ஜே. டொமிபற்சின் பேசுகையில், ஏகாதிபத்திய வாதிகள் வியட்நாமில் நடாத்தும் மிருகத்தனமான தாக்குதலை சோவியத் மக்கள் கண்டிக்கின்றனர் என்றுர். சுயாட்சி, சுதந்திரம், தேச ஒற்றுமைபோன்ற வற்றிக்கு வியட்நாம் மக்கள் மேற்கொண்டுள்ள நீதியான போராட்டத்திற்கு தமது நாடு ஆதரவளிக்கிறதென்றும் வெளிநாடுகளின் தலையீடு வியட்நாமில் இருக்கக் கூடாதென்றும் ...


**வானெலி**

**கொழும்பு**
**புதன் 16 11-66**


(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 ஆறுபடை திருப்புகழ் — கலைநி கிருஷ்ணசாமி, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மடத்திவிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-45 கருத்தரங்கம் — வெங்காயச்செய்கை, 7-15 பாட்டு — ஆர். எஸ். ரட்ணம்பிள்ளை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு — தேவகி குமாரசாமி, 10-00 நேயர் விருப்பம்.


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

| | | |
|---|---|---|
| **கிங்ஸ்லி** (கொழும்பு) | **பிளாஸா** (வெள்ளவத்தை) | **நவா** (கொம்பனித்தெரு) |
| **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) | **விஜயா** (மட்டக்களப்பு) | **ஸ்ரீகிருஷ்ண** (திருமலை) |
| **மொடேர்ண்** (பண்டாரவளை) | **மொடேர்ண்** (பதுளை) | **விஜிதா** (ஹட்டன்) |



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்



## விளம்பரம்

### மானிப்பாய் கிராமசபையின்—1967-ம் ஆண்டு
### சந்தைக் குத்தகை விற்பனவு

மானிப்பாய் கிராமசபை அக்கிராசனரால் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதி காலை 11 மணிவரை கீழ்க்காணும் சந்தைகளின் 1967-ம் ஆண்டுக்குரிய குத்தகைகளை வாங்கவிரும்புவோரிடமிருந்து "சீல்" வைக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 18-11-66 நண்பகல் 12 மணிவரை அவைக்கான கட்டுப்பணங்கள் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| சந்தைகள் | கட்டுப்பணம் |
|---|---|
| 1. காக்கைதீவுச் சந்தை | ரூபா 200 - 00. |
| 2. ஆனைக்கோட்டை சாவற்கட்டுசந்தை | ரூபா 100 - 00 |
| 3. நவாலி—புளியடிச் சந்தை | ரூபா 25 - 00 |

மேலதிக விபரங்கள் மானிப்பாய் கிராமசபைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. மார்க்கண்டு
அக்கிராசனர்
மானிப்பாய் கிராமசபை.

10-11-66
1380


## செய்திச் சுருக்கம்

**மீட்கப்பட்டன**

அப்புத்தளையிலேற்பட்ட பயங்கர மண் சரிவில் ஏழு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

**வேலை நீக்கம்**

மஸ்கெலி ஓயா நீர் மின்சாரத்திட்டம் அமுல்நடத்தப்பட இருப்பதையிட்டு 1000 தோட்டத்தொழிலாளருக்கு வேலைநீக்க நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

**பதினெரு மாடி**

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இ. போ. ச. நிறுவவிருக்கும் பதினெருமாடிக் கட்டடவேலைகள் ஆரம்பமாகியுள்ளன. வெளிநாட்டுப் பிரயாணிகள் வசதிக்காக ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபா செலவில் இது கட்டப்படுகிறது.

ஃ ஃ ஃ

**பொருளாதார சேவை**

இலங்கையில் பொருளாதார சேவையை உருவாக்க ஒரு திட்டம் வகுக்கும்படி திட்ட பொருளாதார அமைச்சை அரசாங்கம்பணித்திருக்கிறது.

ஃ ஃ ஃ

**மட்டக்களப்பில் கனிஷ்ட பல்கலைக்கழகம்**

கனிஷ்ட பல்கலைக்கழகத்தை மட்டக்களப்பிலும் நிறுவ உடனடியாக ஆலோசனை செய்யுமாறு டாக்டர் நாகநாதன் உயர்கல்வி தேசிய கவுன்சில் தலைவரிடம் கேட்டுள்ளார்.

### பச்சை அரிசி விநியோகம்

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதியில் கடந்த பல வாரங்களாக பச்சை அரிசி விநியோகிக்கப்பட்டே வருகிறது. மாதத்தில் ஒருவாரத்திற்காவது நாட்டரிசி விநியோகிக்க வேண்டுமென மக்கள் புகார் செய்துள்ளனர்.

### மாதகலுக்கு மின்சாரம்

மாதகல், செவ்

மாதகல் கிராமத்துக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது.

மாதகல் பகுதியில் எழுபத்திஆறுபாவனையாளர்கள் முன்னதாகவே பணம் செலுத்திவிட்டதால் இவர்களது இல்லங்களுக்கு முதலில் மின்சாரம் விநியோகிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

பனைகள் வியங்குமிலிருந்து பாமல் பெறப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், திரு. ஐ. ஆர். அரியரத்தினம் ஆகியோரும் பேசினர்.


**இராமநாதன்கல்லூரி ஸ்தாபகர் சேர் பொன் இராமநாதன்**
அவர்கள்
**ஞாபகார்த்த தினம்**
18-11-66 வெள்ளிக்கிழமை வடமாநில வித்தியாதிகாரி
**திரு. எஸ. தணிகாசலம்**
அவர்கள் தலைமையில் கொண்டாடப்படும். பிரதம விருந்தினராக
**திரு. வில்மொற் பெரேரா**
அவர்கள்
கலந்துகொள்வார்.
1378


### 'இது' சாதாரணம்

யாழ்ப்பாணம், புதன்

இரட்டைத்தட்டு பஸ்கள் அடிக்கடிபழுதடைவது யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமாகிவிட்டது. இதனுல் பாடசாலைசெல்லும் மாணவர்களுக்கு மிகவும் கஷ்டமாகவுள்ளது.

சிலதினங்களில், ஒரேபாதையில் செல்லும் மூன்று இரட்டைத்தட்டு பஸ்கள் பழுதடைந்து விடுகின்றன. சில இரட்டைத்தட்டு பஸ்கள் டிப்போவிலேயே பழுதடைந்துவிடுகின்றன. இதனுல் பிரயாணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

### 'சட்டத்தின் குறைபாடு'

காலி, செவ்,

'வலிமையற்றவர்களும், பாதுகாப்பற்றவர்களும் வலிமையுள்ளவர்களாலும் பாதுகாப்புள்ள பேராசைக்காரர்களாலும் தாக்கப்படுகின்றனர். சிறுவர்களை வேலைக்கமர்த்தி வேலைவாங்கும் 'அடிமைத்தனம்' தொடர்ந்து இருப்பதற்கு இப்போதிருக்கும் சட்டத்தின் மீதே குறைகூறத் தோன்றுகிறது,

இவ்வாறு காலி மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் காலியில் நடைபெற்ற உலக சிறுவர்தின கொண்டாட்டத்தை யொட்டி காலியிலுள்ள சிறுவர் கமிட்டிக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

### கோஷ்டி சண்டை: 2 பேர் பலி

புதுடில்லி, நவ. 15

கல்கத்தாவின் தென் மேற்கு புறநகர் பகுதியில் நேற்றிரவும் இன்றுகாலையும் இரண்டுகோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பை பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம் நிறுத்த வேண்டியநிலைமை ஏற்பட்டது. இதனுல் இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் இரவில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - ஸிரியா எல்லையில் மீண்டும் கடும் சண்டை

## அரபுநாடுகள் போர்க்கோலம்

ஐ.நா.(நியூயோர்க்)நவ.15

**இஸரேல்-ஸிரிய எல்லையில் நேற்று முழுவதும் துப்பாக்கிச்சண்டை நடைபெற்றது. ஸிரியா முதலில் தாக்கியதாகவும் தற்பாதுகாப்புக்காகவே தாங்கள் திருப்பிச் சுட்டதாகவும் இஸரேல் அறிவித்துள்ளது.**

இஸ்ரேல்-ஸிரிய எல்லைத் தகராறு கடந்தசில தினங்களாக ஓய்ந்திருந்தது. ஆனால் மீண்டும் தலைதூக்கியிருப்பதாக ஐ.நா.வில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முழுவதும் இஸ்ரேல்-ஸிரிய எல்லையில் கடுமையான சண்டை நடைபெற்றதாக ஐ.நா.வில் இருதரப்பினரும் புகார் செய்துள்ளனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் இஸ்ரேல்-ஜோர்டான் எல்லையில் ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்து அரபு நாடுகள் தங்களது படைகளை உஷார் படுத்தியுள்ளதாக கெய்ரோவிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

அரபு நாடுகளில்ஏழு நாடுகள் தங்களது படைகளை உஷார் படுத்தியிருக்கின்றன என்றும் இஸ்ரேலுக்கு எதிர்த்தாக்குதல் தொடுக்க இந்த நாடுகள் தயாராக இருக்கின்றன என்றும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கியஅரபுக்குடியரசு, குவைத், ஸிரியா, லெபனான் ஆகிய நாடுகள் தயார் நிலையில் இருக்கின்றனவாம்.

நேற்று முன்தினம் ஜோர்டான் படைகளுடன் இஸ்ரேல் படைகள் மோதிக்கொண்டதுபற்றி ஸிரியாபிரதமர் கருத்து வெளியிடுகையில், யூதர் நாடொன்றுக்கு எதிராகப் போர் நடத்த வேண்டிய உரிய தருணம் இப்பொழுது வந்துவிட்டது என்று கூறினார். இஸ்ரேல்-ஜோர்டான் எல்லையில் நிகழ்ந்த சண்டையில் 26ஜோர்டான் துருப்புகள் கொல்லப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### அண்ணாதுரை அதிர்ச்சி

ஈரோடு, நவ. 15

''டில்லியில் காமராஜர் வீட்டிற்குத் தீவைக்கப்பட்ட செய்தி அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. காமராஜர் உயிர்தப்பியதை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இதுபோன்ற வன்முறைச் செயல்களுக்கு தி.மு. கழகம் தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. டில்லி அரசாங்கம் காமராஜருக்கு தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்'' என்று திரு. அண்ணாதுரை ஈரோட்டில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

### ஜோன்ஸன்

வாஷிங்டன், நவ, 15

டெக்ஸாஸில் பத்துத் தினங்கள் கழித்தபின்னர் அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸன் நேற்று வெள்ளை மாளிகை திரும்பினார்.

58 வயதுள்ள அதிபர் ஜோன்ஸன் இன்று மேரிலாந்திலுள்ள கடற்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இங்கு அவருக்கு சத்திர சிகிச்சைகள் நடைபெறும். (பி.டி.ஐ.)

### கூரை சரிந்து இருவர் காயம்

மாதம்பை, செவ்வாய்

மட்டக்கொட்டுவ பாடசாலையில் திருத்தவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது பாடசாலையின் கூரை சரிந்து விழுந்ததன் காரணமாக வேலை செய்து கொண்டிருந்த இரு வேலையாட்கள் காயங்களுடன் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ரஷ்யப் பிரதமரின் லண்டன் விஜயம்

மாஸ்கோ, நவ. 15

**ரஷ்யப் பிரதமர் திரு: அலெக்ஸி கோஸிஜின் அடுத்த வருடம் பெப்ரவரிமாதம் ஆறும் திகதி பிரிட்டனுக்கு விஜயம் செய்வார் என்றுஉத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் அண்மையில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்திருந்த பொழுது திரு. வில்ஸன் ரஷ்யப் பிரதமருக்கு அழைப்புவிடுத்திருந்தார்.

லண்டன் வரும் ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின் உலக விவகாரங்கள் குறித்து முக்கியமாக வியட்நாம் நெருக்கடி, அணு ஆயுத படைக்குறைப்புபற்றி பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

# பிரபஞ்சத்தின் ஆதிபற்றிய விபரம்

## விஞ்ஞானிகள் வெளியிட்டகருத்து

ஹவுஸ்டன், நவ. 15

''ஜெமினி-12'' விண்வெளிக்கப்பலில் பூமியை வலம் வந்த அமெரிக்கவாணவெளி வீரர்களின் புதியசாதனைகள் பிரபஞ்சத்தின் ஆதிபற்றியும் நட்சத்திரங்களின் பிறப்பு பற்றியும் தெரிந்து கொள்ள வழிசெய்யலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

''ஜெமினி12'' கப்பலில்பிரயாணம் செய்துகொண்டிருந்த மேஜர் ஆல்ட்றின் நேற்று விண்வெளிக் கப்பலுக்கு வெளியேதலையை நீட்டியவாறு (திறந்த காரில் செல்வதுபோல) உல்லாசப் பிரயாணிபோல் சென்று ஏராளமான புகைப்படமெடுத்தார். நட்சத்திரங்களையும் புதிய நட்சத்திரங்களையும் அவர்தமது காமராவினால் படம்பிடித்தார்.

புதிய நட்சத்திரங்களின் விபரங்கள், விஞ்ஞானிகளை நீண்டகாலமாக பிரச்னைக்குள்ளாக்கிவரும் பல புதிர்களுக்கு விடையளிக்கலாம், என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். பிரபஞ்சத்தின் ஆதியையும் இதிலிருந்துகண்டுபிடிக்கமுடியுமாம்.

**கடைசிப்பிரயாணம்**

''ஜெமினித்திட்டம்' இப்பிரயாணத்துடன் பூர்த்திபெறுகிறது. அடுத்ததிட்டம் அப்போலோ ஆகும். அதாவது சந்திரனில் மனிதனை இறக்குவதே அமெரிக்காவின் அடுத்த திட்டமாகும்.

### கந்தசஷ்டி

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெறுகிறது. தினமும் கந்தபுராணப் படிப்புக்கு பிரமஸ்ரீ க. தியாகராசா குருக்கள் விரிவுரையாற்றி வருகின்றார். சனிக்கிழமை திருக்கல்யாணமும், ஊஞ்சல் வைபவமும் அதன்பின் முருகப்பெருமான் வள்ளி—தெய்வானை சமேதராக வீதி வலம்வரும் காட்சியும் நடைபெறும்.

### முஸ்லிம் மகாநாடு

கண்டி, செவ்வாய்

கல்வி, கலாச்சாரம், அரசியல், முதலிய விஷயங்கள் பற்றி கலந்தாலோசிப்பதற்காக கண்டியிலுள்ள வாலிப முஸ்லிம்கள் இம்மாதம் 18-ந் திகதி கண்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் மகாநாடொன்றை நடாத்த தீர்மானித்துள்ளனர்.

# ஐ. நா. வில் சீனு

## அமெரிக்கா கோரிக்கை

ஐ. நா. (நியூயோர்க்), நவ. 15

ஐக்கியநாடுகள்சபையில் கம்யூனிஸ்ட் சீனு இடம் பெறுவதற்கு ஐ. நா.வின் வழக்கமான விதிகள் மீறப்படக்கூடாது என்று அமெரிக்காவும் பன்னிரண்டு நாடுகளும் ஐ. நா.வைக் கேட்டுள்ளன.

சீனுவை ஐ. நா.வில் சேர்க்கும் தீர்மானம் நிறைவேறுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை அத்தீர்மானம் பெறவேண்டும் என்று இந்த நாடுகள் கோரியுள்ளன.

ஜப்பான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் உள்ளிட்டு பல நாடுகள் இத்தீர்மானத்தில் கைவெழுத்திட்டுள்ளன.

ஐ. நா.வில் சீனுவை அங்கீகரிப்பது சம்பந்தமான விவாதம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

# நெருக்கடிகளின்போது நிதானம்அவசியம்

## சங்கராச்சாரியார் அறிவுரை

புதுடில்லி, நவ. 15

ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரியாரின் ஐம்பதாவது பிறந்ததினத்தை யொட்டி டாக்டர் ராதாகிருஷ்ணனும் பிரதமர் இந்திரா காந்தியும் அவரைச் சந்தித்தனர்.

கஷ்டங்கள் ஏற்படும் போதுதான் நிதானம் அவசியம் என ஆசாரியாள் பிரதமருக்கு உபதேசம் செய்தார்.

தேசத்திற்குச் சோதனை நிறைந்த இக்காலத்தில் மக்களிடையே உறங்கிக்கொண்டிருக்கும் ஆத்மீக ஒளியை தட்டி எழுப்பவேண்டும் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் தமது உரையின் போது குறிப்பிட்டார்.

பிரதமர் பேசும்போது, ஆதிசங்கரர் காட்டிய 'வழியிலே நாம் செல்லவிரும்புகிறோம். பல்வேறு பிரச்னைகளையும் மக்கள் சமாளிக்க போதிய மனவலிமைபெற ஆசாரியாள் அருள்பாலிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

'நாட்டில் அதர்மமும், அநியாயமும் பெருகிக் கொண்டிருக்கிறது. உணவு தானியங்களைப் பதுக்கி வைத்து கொள்ளை லாபத்திற்கு விற்பவர்கள் அடுத்த பிறப்பில் அதற்குரிய தண்டனையைப் பெறுவார்கள்' என்று ஸ்ரீ ஆசாரியார் வரவேற்புக்கு பதிலளித்து ஹிந்தியில் பேசினார்.

### "தேர்தல் நிச்சயம் நடைபெறும்"

புதுடில்லி, நவ. 16

'பொதுத் தேர்தலை ஒத்திவைக்கும் பிரச்னையேஇல்லை. உத்தரப்பிரதேசத்திலும் பீகாரிலும் உணவு நிலவரம் மோசமடைந்து வருவதைச் சமாளிக்க அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுத்துவருகிறது என்று பிரதமர் மத்திய மந்திரி சபையில் மாறுதல்கள் செய்வது குறித்து, அவர்கருத்தை நான் ஏற்கவில்லை என்ற கருத்து பொய்யானது' என காங்கிரஸ் தலைவர் காமராஜர் நிருபர்களுக்குக் கூறினார்.

### ஆஸி. கோதுமை

ஸிட்னி, நவ. 15

பாகிஸ்தானுக்கு 2,50,000 தொன் கோதுமை விற்பனை செய்திருப்பதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது. (பி.டி.ஐ.)

# சென்னையில் நடைபெறும் தமிழ் எழுத்தாளர் மகாநாடு

## ஈழத்து சிங்கள எழுத்தாளர் கௌரவிக்கப்படுவார்

சென்னை, நவ. 15

பதினைந்தாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு அடுத்த மாதம் 3, 4-ம் திகதிகளில் மயிலாப்பூர் ஏ. வி. எம். ராஜேஸ்வரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மகாநாட்டில் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ள நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம்பிள்ளைக்கும், மஞ்சரி ஆசிரியர் திரு. தி. ந. ரங்கநாதனுக்கும் கேடயங்கள் வழங்கப்படும். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியச் செல்வங்களை சிங்கள மொழியில் பெயர்த்துள்ள தர்ம [illegible] சில தமிழ் நூல்களை [illegible]றையும் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ள மதுரா கிருஷ்ணமூர்த்திக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படும்.

''எழுத்தாளரிடம் எதிர்பார்ப்பது?'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றும் நடைபெறும். நகைச்சுவைக் கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் நடைபெறும்.

சுமார் ஆயிரம் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய விபரங்கள் அடங்கிய'' தமிழ் எழுத்தாளர் யார், எவர்?'' என்னும்தொகுப்பு நூல் ஒன்றும் மகாநாட்டில் வெளியிடப்படும்.

### வீடு தீக்கிரை

சங்கானை, செவ்.

பெறுமதியான பல வீட்டுப் பொருள்களும் வீடும் எரிந்துசாம்பலான சம்பவமொன்று சங்கானை தேவாலய வீதியில் நிகழ்ந்துள்ளது.

த. சண்முகம் என்பவரது வீடு நேற்று மாலை, வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் திடீரெனத்தீப் பிடித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. வீடு எரிவதைக் கண்ட அயலவர்கள் தங்களால் முடிந்தவரை முயற்சித்தும் பலனளிக்காது முற்றாக எரிந்து சாம்பலாகி விட்டதாம்.

### கொடி வசூல்

வல்வெட்டித்துறை, செவ்

வடமராட்சி சயரோக தடுப்புச் சங்கத்தினர் இவ்வருடம் கொடிவிற்பனையால் 860 ரூபா சேகரித்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகம்

ஆத்துமா; புத்தி உனது தேவியாகிய பார்வதி; பிராணன்கள் உனது கணங்கள்; இந்தத் தேகம் உனது வீடு. சின்றின்பச்செயல் உனது பூசை, நான் எந்த வேலைசெய்தாலும், அது உனது ஆராதனை; ஏ சம்போ!

— ஸ்ரீ சங்கராசாரி.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box [illegible]

Telegrams : EELANADU Jaffna; Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை [illegible] 1 (16-11-66)


## துரித முயற்சி தேவை

தேயிலைச் செய்கைக்கென முதுக்குரிய காணிகள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த காணிக் கச்சேரியை, காணி அபிவிருத்தி மந்திரி கடைசி நேரத்தில் ரத்துச்செய்து விட்டார். இதற்கான காரணத்தை அவர் இன்னும் விளக்கவில்லையாயினும் உலக சந்தையில் இலங்கைத் தேயிலை தொடர்ந்து வீழ்ச்சி யடைந்துவருவதும் இலங்கைத் தேயிலைக்குப் போட்டி அதிகரித்துவருவதும், இனியும் இலங்கையின் பொருளாதாரத்துக்கு தேயிலையை நம்பியிருப்பதில் பயனில்லை என்ற உண்மை நிலையை மந்திரிக்கு உணர்த்தியதால்தான் காணிக் கச்சேரியை அவர் ரத்துச் செய்திருக்கவேண்டும்.

சில தினங்களுக்கு முன்னரும்கூட இலங்கைத் தேயிலைக்கு ஏற்பட்டுவரும் வீழ்ச்சி பற்றி நாம் இதே பத்தியில் குறிப்பிட்டு, தேயிலையையும், ரப்பரையும் மட்டும் நமது பொருளாதாரத்துக்கு நம்பியிருப்பதில் பயன் இல்லையென்றும் உள்நாட்டு உணவுத் தேவையையாவது நிறைவேற்றக்கூடிய முறையில் முயற்சிசெய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தோம். தேயிலைச் செய்கைக்கென காணிகள் வழங்குவதற்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த காணிக் கச்சேரியை மந்திரி ரத்துச் செய்ததிலிருந்து அவரும் உண்மை நிலையை உணர்ந்து கொண்டுள்ளாரென்பது தெரிகிறது. ஆனால் இனியும் இது விஷயத்தில் தாமதித்து நடவடிக்கை எடுப்பது நல்லதல்ல.

மந்திரிசபையில் இலாகாக்களில் மாறுதல்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இப்போது நாட்டில் நிலவும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, அவைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் நாட்டின் தேவைகளை நிறைவேற்ற எப்போதுமே வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்க முடியாது. நமது தேவைகளை நாமே உற்பத்திசெய்ய முயற்சி எடுக்கவேண்டும். தேயிலைச் செய்கைக்கு புதிதாக காணி வழங்குவதை நிறுத்தினால் போதாது. நமது தேவைக்கான இதர பொருள்களை உற்பத்திசெய்வதற்கு உணவு விவசாய அமைச்சும், காணி அமைச்சும் உடனடியாக துரிதமாக, கூட்டாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் அமைச்சகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் உணவு, விவசாய அமைச்சு உட்பட இதர பல அமைச்சுகள், ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தாமலிருந்திருக்கின்றன. இது சிக்கனமல்ல. இனியும் இதுபோன்று பொறுப்பற்றமுறையில் அமைச்சுகள் நடைபெறுமல் துரிதமாக நாட்டின் நிலைமையையும், தேவையையும் உணர்ந்து செயலாற்றவேண்டும்.

## யாருக்கு நஷ்டஈடு?

மஸ்கெலிய ஓயா நீர் மின்சாரத் திட்டம் அமுல் செய்யப்படவிருப்பதனால் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர் வேலையிழக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் எதிர் காலம் என்ன?

மஸ்கெலிய ஓயா நீர் மின்சாரத் திட்டம் நாட்டில் மின்சாரத் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்கும். நாட்டுக்கு ஒளி கொடுப்பதுடன் கைத்தொழில் அபிவிருத்திக்கும் மின்சாரம் பயன்படும். இதனால் வேலையில்லாதிருப்போர் பலருக்கு வேலையும் கிடைக்கும். இது நல்ல, வரவேற்க வேண்டிய திட்டம்தான். இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இப்போது தோட்டங்களாக இருக்கும் பல ஏக்கர் நிலம் அத்திட்டத்தினுள் சேர்ந்து விடும். இந்த நிலத்தை எடுப்பதற்கு தோட்டச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடுகொடுக்கும். ஆனால் தோட்டத்தை உருவாக்கி, தோட்டச் சொந்தக்காரர்களுக்கு பொருளீட்டிக் கொடுத்த தோட்டத் தொழிலாளருக்கு நஷ்ட ஈடு எதுவும் கிடைக்குமா? அவர்களுக்கு இப்போதுள்ள வேலையும் இல்லாது போய் விடும். இது அநியாயம்.

வேலை இழக்கும் தோட்டத் தொழிலாளருக்கு வேறு தோட்டங்களில் வேலை கொடுக்கப்பட வேண்டும். இல்லையேல் அவர்கள் வேறு தொழில் பார்ப்பதற்காவது வசதி செய்து கொடுக்கப் பட வேண்டும்.

## 'நிவாரணம் வழங்குக'

மூதூர், செவ்வாய்

மூதூர் முதலாவது எம். பி. திரு. எம். ஈ. எச். முகமதலி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும்படி திருக்கோணமலை அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

---

வல்வெட்டித்துறை, செவ்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் கடந்த வருடங்களைப் பார்க்கிலும் இவ்வருடம் ஏராளமானவர்கள் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில், பொலிகண்டி, கந்தவனக் கடவை ஆகிய கோவில்களிலும் கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

# சிறுதீவாகும்--நெடுந்தீவு

நீண்ட வானவெளிப் பயணத்தை மேற்கொண்டு திரும்பிவிடலாம் ஆனால் நெடுந்தீவுப்பயணம் அவ்வளவு சுலபமானதல்ல. எத்தனையோ நாட்கள் அப் பயணத்துக்குத் தேவைப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 22மைல் தூரத்திலுள்ள இத்தீவுக்கு காலையில் போனால் மறுநாள் மாலையில்தான் திரும்பலாம். 6மைல் கடற் பிரயாணம் மக்கள் பலத்த சோதனைக்குள்ளாவது இந்த 6 மைல் பிரயாணத்தில்தான். 'ராஜேஸ்வரி' கொழும்புக்குப்போய் ஒன்றரை வருடகாலமாகிவிட்டது. இன்னமும் திரும்பவில்லையென்றார் குறிகாட்டுவானில் நின்றுகொண்டிருந்த வயோதிபர் ஒருவர். பாவம் அவரதுமகனைத்தான் அவர் தேடுகிறாரோ என்று அனுதாபங்கொண்டு விஷயத்தைக்கேட்டேன். ராஜேஸ்வரி ஒர் இயந்திரப்படகு என்பதையும் அப்படகு ஒன்றரைவருடத்துக்கு முன் நெடுந்தீவுக்குப்பிரயாணத்தை மேற்கொண்டு வந்தவர்களை சுமந்துவந்தது என்பதையும் அவர்வாயிலாக அறிந்தேன். இப்போது அது ஓடமுடியாமல் கொழும்பில் நிற்கிறது என்பதையும் அறிந்து கொண்டேன்.

மக்களின் கஷ்டத்தைப் புரிந்துகொள்ள முடியாத 'ராஜேஸ்வரி' அங்கு நின்றுகொண்டிருக்க 'சில்வர் ஸ்பிறே' என்ற இயந்திரப் படகு தன்னால் சுமக்கக் கூடிய ஆட்களைச் சுமந்துகொண்டு ஒருநாளைக்கு ஒருதடவை குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு செல்கிறது. இந்தசில்வர்ஸ்பிறேக்குள் செல்லமுடியாதவர்கள் நீந்தக்கூடியவர்களாக இருந்தால் நீந்தியும் மற்றவர்கள் ஏதோஒரு வழியாகவும்செல்லவேண்டியதுதான். இதற்குள் இன்னொருவிஷயம், குறிகாட்டுவான் பாலமும் இப்போது பதிந்துகொண்டுவருவதால்நீந்திக்கடக்க முற்படுபவர்கள் இப்போது நீந்தும் தூரத்தைவிட இன்னும் சுமார் ஒருமைல்தூரம்மேலதிகமாக நீந்தவேண்டியும் வரும். மிகிர்சனுக்குசவால்விடக்கூடிய பலர் நெடுந்தீவிலிருந்து விரைவில் தோன்றக்கூடுமென எதிர்பார்க்கலாம்.

சுமார் 8000 மக்களைக் கொண்ட நெடுந்தீவில் விளக்குவைப்பதற்கு ஆளில்லையென்றால்? வேடிக்கையாகத்தான் இருக்கும். ஆனால் நெடுந்தீவுக்கு சமீபத்தில் சென்றதும் இந்த உண்மை விளங்கும். ஆம். கரையிலுள்ள கலங்கரைவிளக்கத்தில் முன்னர் விளக்கேற்றி வைப்பார்களாம். இப்பொழுது அவ்விதம் ஏற்றிவைக்கப் படாததால் இரவுநேரத்தின்போது சிலவேளைகளில் சிறுகப்பல்கள் மோதிக்கொண்டு விடுகின்றனவாம். கிராமசபையினராகுதல் இந்த மோதல்களைத்தடுக்க முன்வந்தால் நல்லதாக இருக்கும்.

### ஜனத்தொகை குறைகிறது

நெடுந்தீவில் இப்பொழுது ஜனத்தொகை குறைந்து வருகிறது. காரணம் குடியேற்றத்திட்டங்களுக்கு பலர்சென்றுகொண்டிருப்பதே குடியேற்றத் திட்டங்களுக்குச் சென்றவர்

(5ம்பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

ஒரு வாய் பசும் புல்லுக்கு வழியில்லாமல், ஓரத்தில் இடக்கும் கடதாசிகளையும் கந்தலையும் சப்பித் தின்று ஒட்டி உலர்ந்து போய் நடுத்தெருவில் படுத்துறங்கும் சாதுவான பசு, ஆறறிவு படைத்த மானிடரிடையே ஒரு பெரும் கலகத்தை விளைவித்து, பத்துப் பன்னிரண்டு உயிர்களுக்கு யமனாகி, ஒரு பெரும் தேசத் தலைவனின் வீட்டையும் பல விலைபோன கட்டிடங்களையும் தீக்கிரையாக்கி, ஒரு மந்திரியை வெளியேற்றி, பல மந்திரிகளை இடம் பெயர்த்து விட்டதென்றால் நம்ப முடியாத ஆச்சரியமாயல்லவா இருக்கிறது! ஆயினும் சமீபத்தில் இந்தியாவில் அப்படித்தான் நடந்தது.

அந்தப் பசுவானது இந்தக் கோமாளிக் குழப்பங்களைப்பற்றி என்ன நினைத்ததோ யாம் அறியோம். 'நேரத்துக்கு நல்ல தீனி போடமாட்டார்கள், குப்பை கூளத்தைத் தின்று வயிறு வளர்க்க வேண்டியிருக்கிறது, சாலையிலும்

# பசுவும் சாதுவும்

மாலையிலும் தாங்கள் சிறுபாகக் காப்பி குடிப்பதற்காக முலைக்காம்பு புண்ணாகும்வரை பாலைக் கறந்து எடுக்கிறார்கள், நான் சன்றெடுத்த பாலன் வயிற்றுக்கில்லாமல் மடிந்து செத்துப் போனான், செத்த பிறகும் அவனைச் சும்மாவிட்டார்களா? அவனுடைய தோலை உரித்தெடுத்து உள்ளே வைக்கோலைத் திணித்து நாலு கால்களுக்கும் நாலு தடிகளைக் கட்டி என் முன்னே காட்டுகிறார்கள்; அவனுடைய நினைவு வந்ததும் என்னையறியாமலேயே பால் சுரக்கிறது; இந்தப் பாழ்பட்ட சீவன் எப்பொழுது பிரியுமென்றாகி விட்டது எனக்கு. இந்த லட்சணத்தில் என்னைக் கொல்லப்படாதென்று சண்டை போட்டுக் கொண்டு தாங்களே ஒருவரை ஒருவர் கொல்லுகிறார்கள், இந்தக் கலக மானிடப் பூச்சிகள்!' என்று பசு நினைத்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொள்ளும்.

பசு, அஹிம்சையே உருவான சாதுவான பிராணி. அதன் வதையைத் தடை செய்ய வேண்டுமென்று சாதுக்கள் மிரண்டு இம்சையில் இறங்கினார்கள். உயிரோடுள்ள போது அதை நன்றாகப் போஷிப்பதன்றோ கோ சம்ரக்ஷணம்? பசுவதைக்கு எதிராக பலாத்காரம் பிரயோகித்து ஆர்ப்பாட்டம் செய்வது கன்றை விட்டு தோலை விழுங்குவது போலவும், உருவத்தை விட்டு நிழலைப் பிடிப்பது போலவும், தலையைவிட்டு வாலைப் பற்றுவது போலவுமன்றோ இருக்கிறது!

பசுவதைக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவது சரியல்ல என்று ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளே கடைசியாகக் கூறிவிட்டார். புரட்சிகளும் சீர்திருத்தங்களும் நடப்பது உலக நியதி ஆனால் எல்லாப் புரட்சிகளிலும் உயிரிழப்பு ஏற்படுவதுமில்லை; எல்லா சீர்திருத்தங்களாலும் நன்மை உண்டாவதுமில்லை.

—வழிப்போக்கன்

# ஆலயப் பிரவேசத்திற்கு சத்யாக்கிரகமா?

## காந்திஜியின் கருத்து

ஸ்ரீமான் காந்தி சுடுபட்டு இறந்தது 30. 1. 48. அன்று காலை நிலுவையிலிருந்த பல கடிதங்களுக்கு மறுமொழி எழுதியிருக்கிறார். ஒன்று ஆலயப்பிரவேசத்திற்குச் சத்தியாக்கிரகம் பண்ணுவதைக் குறித்தது. அது மதவிரோதமானது; பாபகாரியமானது; ஒதுக்கப்படவேண்டியது; அர்த்தமற்றது என்பதே.

### ஒரு நந்தன் பிறக்க வேண்டும்

நாம் எவ்வளவோ தெளிவாகச் சொல்லியும் ஹரிஜனங்கள் ஏன் இப்படிச் செய்கி[illegible]
[illegible]ந்து சத்தியாக்கிரகம் செய்பவர்கள் உண்மையான பக்தர்களல்ல. அவர்களுக்குத் தேவதரிசனத்தைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றித்தான் கவலைப்படுகிறார்கள். அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் மதத்தினின்று தூரவிலகி ஓடுவதாக அர்த்தம். கடிதம் எழுதுவதோ அல்லது இன்னொருவரை விட்டு மொட்டைக்கடிதங்கள் எழுதச் சொல்வதோ பக்தர்கள் செய்யும் காரியமல்ல. உண்மையான பக்தன் நந்தனைப் போல் அடிச்சுவட்டைப் பின்பற்றுவான். கடவுள் ஒருவருடைய உதவியைத் தவிர, வேறு எவருடைய உதவியையும் நந்தன் வேண்டவில்லை. அதனால்தான் மிக உயர்ந்த [illegible]தோன் என்று தங்களைக் கருதிக்கொள்ளும் பிராமணர்களால் கூட நந்தனார் வணங்கப்படுகிறார்.

தாங்களாக ஹரிஜன நிலைக்குத் தங்களை மாற்றிக் கொண்டவர்களிடையே ஒரு நந்தனார் அவதாரம் செய்ய வேண்டுமென்பது என் ஆசை பிறவியிலேயே ஹரிஜனங்களாகப் பிறந்தவர்களின் ஆசையும் இதுவாகவே இருக்கும். ஹிந்துசமூகம் விரும்பினால் பயபக்தியுடனும், மரியாதையுடனும் ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் அழைத்துக் கொண்டு செல்லட்டும். இல்லாவிடில் இந்தமாதிரி நிலைமை ஏற்படும்வரையில் ஹரிஜனங்கள் அவரவர் வீடுகளில் இருந்து கொண்டு தங்கள் பக்தியென்ற கங்கைப் பிரவாகத்தால் தங்கள் வீடுகளைப்புனிதமாக்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆலயத்தின் முன்னும் அவர்கள் உட்கார்ந்து கொண்டு சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை.

(தினமணியிலிருந்து எடுக்கப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்துறையை ஊக்குவிக்க மந்திரி புதிய திட்டம்

கொழும்பு, செவ்.

தனியார் துறையாரும் வர்த்தகத்தில் பங்கு கொள்ள உரிமையளிக்கும் வகையில் ஒரு திட்டமொன்றை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தயாரித்துள்ளார்.

கூ. மொ. வி. ஸ்தாபனத்திற்கு இதுவரையும் இறக்குமதி செய்ய சில பொருட்களுக்கு ஏகபோக உரிமை வழங்கப்பட்டு வந்த நியதியில் சில மாற்றங்கள் ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

அத்தியாவசியமான பொருட்களைத் தனியார் துறையினர் இறக்குமதி செய்து விநியோகம் செய்ய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென அறியவருகிறது.

கூ. மொ. வி. ஸ்தாபனத்திலும் பார்க்க தனியார் துறையினர் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகம் செய்ய சகல வசதிகளையும் கொண்டுள்ளாரென நேற்று அரசாங்க உத்தியோகத்தர்கள் நடத்திய மகாநாடொன்றில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய கல்வி மந்திரிக்கு மாரடைப்பு

புதுடில்லி, நவ. 15

இந்திய மந்திரி சபையின் புதிய கல்வி மந்திரி ஜனாப் பக்ருதின் அலி அகமதுக்கு இன்று காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து உடனே தனியார் ஆஸ்பத்திரியொன்றில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

இன்று உப ஜனாதிபதி, பிரதமர், மற்றும் மந்திரிகள் ஆஸ்பத்திரிக்குச் சென்று இவரைப் பார்வையிட்டனர். இவர் நேற்று முன்தினந்தான் பாசன மந்திரியாக இருந்து கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

பின் வந்த செய்தியில் அமைச்சர் அகமத் குணமாகி வருகிறாரென்றும், அவர் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டுமென டாக்டர்கள் ஆலோசனை கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

—

## இளைஞர் மன்றம் அங்குரார்ப்பணம்

கொத்மலை, செவ்வாய்.

கொதிமலை - திஸ்பனையை சேர்ந்த படித்த இளைஞர்களுக்கிடையே மன்றமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. திரு. கே. ராஜகோபால் தலைவராகக் கொண்ட இம் மன்றம் அடுத்த மாதம் ஒரு கலைவிழாவை நடாத்தவிருக்கிறது

—

## விவசாயிகள் கவலை

செட்டிகுளம், செவ்.

செட்டிகுளத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக இரண்டாயிரத்துக்கு மதிகமான நெல்வயலில் விதைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால் பெரும் சேதம் ஏற்படும் என்று விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

# ‘இதுபோன்ற வழக்கில் முன்பும் சாட்சியமளித்தேன்’

## பெண் கடத்து வழக்கில் கார்ச்சாரதி

சாவகச்சேரி, செவ்.

“இவ்வருடம் நவம்பர் 2-ம் திகதி பகல் 2 மணியளவில் கிளிநொச்சியில் நின்றுகொண்டிருந்த எனது காரை எதிரியாகிய விமலேந்திரன் தருமபுரத்துக்கு யாரையோ சந்தித்து வருவதற்காக கொண்டுவரும்படி கேட்டார். நான் சம்மதித்து காரைச் செலுத்தினேன் வழியில் காரை மறிக்கும்படியும் யாரோ பாடசாலைவிட்டதும் அங்கிருந்து வரவேணும் என்றும் கூறினார் உடனே நான் மறித்தேன் அதிக நேரம் சென்றதால் நான் போவதாகக் கூறினேன் எதிரி போகும்படியும் பாடசாலை விட்டதும் தான்வருவதாகக்கூறினார் எதிரியுடன் வேறு மூவரும் வந்தனர். இவர்களது பேச்சில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது நான் போய் கடைமுதலாளி ஒருவரிடம் கூறினேன் அவர் என்னைப் போகும்படியும் தான் பாடசாலை அதிபரிடம் கூறுவதாகவும் கூறினார். பின்னர் எதிரிவந்து காரை விடும்படி கேட்டார் நான் ஒட்டிச்சென்று அப்பாடசாலையடியில் மறித்தேன் காரில் பிழை ஏற்பட்டதால் அதைத் திருத்திவிட்டுப் பார்த்தபோது 4 ஆண்களும் ஓர் யுவதியும் காருள் இருந்தனர் எதிரி காரைச் செலுத்தும்படி என்னிடம் கூறினார் நான் தருமபுரம் நோக்கிக் காரைச்செலுத்தினேன் வழியில் கார் பழுது பட்டது நான் அவர்களிடம் வேறு கார் பிடிக்கும்படி கூறினேன் எதிரியும் பெண்பிள்ளையும் காரில் இருக்க மற்றைய மூவரும் வேறு கார்பிடிக்கச் சென்றனர் பின்னர் நான் காரைத் திருத்தினேன் அப்போது பாடசாலைக்கு அருகாமையிலுள்ள கடைமுதலாளியின்து கார் வந்து நின்றது. அதில் இருந்து ஆசிரியர் ஒருவரும் ஒரு மாணவனும் கார்சாரதியும் இறங்கினர் ஆசிரியர் காருள் இருந்த யுவதியிடம் எங்கே போகிறாய் என்று கேட்டார் அவர் ஒன்றும் பேசவில்லை பின் எதிரியையும் யுவதியையும் முதலாளியின் காரில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். பின்னர் இரவு 10 மணிக்கு எனது முறைப்பாட்டைப் பொலிசார் பதிந்தனர். யுவதி காரில் ஏறும் போது எவருடனும் பேசவில்லை அழவும் இல்லை என்னிடம் ஒன்றும் கூறவும் இல்லை அமைதியுடன் இருந்தார் மற்றக் காரில் ஏறும் போதும் மறுக்காது ஏறினார் நான் முன்பும் ஒரு பெண் கடத்தல் வழக்கில் சாட்சியமளித்துள்ளேன்” இவ்வாறு கிளிநொச்சி பெண்கடத்தல் வழக்கொன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு றூபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த கார்சாரதி இ. பத்மநாதன் கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் நவம்பர் மாதம் 2-ம் திகதி கே. ஜெகஜோதி (14 வயது) என்னும் பெண்ணை பி. விமலேந்திரன் என்பவர் கடத்தியதாகக் கிளிநொச்சி பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடைமுதலாளி வீ. சவுண்டிபேல் கே. ராஜேந்திரம் ஆகியோரும் சாட்சியமளித்ததின் மேல் மாஜிஸ்திரேட் விசாரணையை இம் மாதம் 29-ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

—

## பரிதாபமரணம்

சங்கானை, செவ்.

கிணற்றில் தவறி வீழ்ந்து ஒருபெண் மரணமான சம்பவம் சண்டிலிப்பாய் வடக்கில் நிகழ்ந்தது.

ஜெயராணி சண்முகநாதன் என்றபெண் காலைப் போசனம் தயாரிப்பதற்குத் தண்ணீர் அள்ளச் சென்ற சமயம் பாசி சறுக்கியதால் தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்துபோனதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. சங்கானைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் குணதிலகா ஸ்தலத்தில் சாட்சிகளைப்பதிவுசெய்தார். மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா விசாரணைமுடிவில் நீரில் மூச்சுத்திணறியதால் மரணம் சம்பவித்ததெனத் தீர்ப்பளித்தார்.

—

கொழும்பு, செவ்.

கொழும்பு மாநகரசபை தண்ணீர் விநியோகப் பகுதியை சேர்ந்த திரு. எஸ். முருகேசு, நீர்கொழும்பு மாநகரசபைக்கு பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். இவருக்கு கொழும்பு மாநகரசபை பொறியிலாளர் ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடத்தினர்.

## வேலைநிறுத்தம் நீடிக்கிறது

கொழும்பு, செவ்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தொழில் அமைச்சரின் சமரசத் திட்டத்தை முதலாளிமார் சம்மேளனம் முழுதாக ஏற்றுக் கொள்ள மறுத்ததே வேலை நிறுத்தம் நீடிப்பதற்குக் காரணமாகும்.

## ‘மசோதாக்கள் ஆங்கிலத்தில்தான்’

புதுடில்லி, நவ. 15

லோகசபையில் சமர்ப்பிக்கப்படும் சகல மசோதாக்களும் ஆங்கிலத்திலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சட்ட மந்திரி திரு. பதக் தெரிவித்துள்ளார்.

சுப்ரீம் கோர்ட்டுகளில் இப்போது இந்தியில் அலுவல்கள் நடைபெறுவதில்லையெனவும் அவர் எடுத்துக் கூறினார்.

—

தெஹ்ரான், நவ. 15

மேற்கு ஈரானில் 150 வயதுடைய ஒரு வயோதிபருக்கு 100 வயதுடைய இரு ‘பிள்ளைகள்’ இருப்பதாகவும் 200 பேரப்பிள்ளைகள் இருப்பதாகவும் குடிசன மதிப்பீடொன்றில் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே இருமுறை மணம்செய்து கொண்டுள்ள தமது மனைவிகள் சம்மதம் தெரிவித்தால் தாம் ஒரு இளம்பெண்ணை மணம் செய்து கொள்ள விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# எது ஜனநாயகம்?

எமது தேசிய வாழ்வில் தமிழ் பேசும் மக்கள், ஒவ்வொரு கட்டத்திலும், அவமானப்படுத்தப்பட்டு, கேவலமாக நடத்தப்படுகின்றார்கள். பொதுத்தேர்தல் என்றாலும்சரி, உபதேர்தல் என்றாலும் சரி. வெற்றியோ, தோல்வியோ படிப்போ, தொழிலோ, பதவிஉயர்வோ, வாழ்க்கை வசதியோ எந்தத் துறையிலும் அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ, அல்லது கேவலம் பயங்கர ஜந்துக்களாகவோ கணிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றனர். இதுதான் சனநாயகம் என்றால் எமது அடுத்த சந்ததியினரிடம் இருந்து திட்டவட்டமான பதிலை எதிர்பார்க்கலாம்.

‘தியாகு’

திருமலை.

ஃ ஃ ஃ

## ஆசிரியர் நியமனம்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நியமிக்கப்படும் சிங்கள ஆசிரியர்கள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களாய் இருத்தல் அவசியம். இங்கு இத்தகைய சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும் அதேவேளையில் தென்பகுதியிலும் சிங்களப் பிள்ளைகள் தமது சகோதரத்துவ பாஷையாகிய தமிழை ஒரு மேலதிக பாடமாக ஏன் கற்றுக்கொள்ளக் கூடாது? இதற்கு சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற தமிழ் ஆசிரியர்களை அப்பகுதிகளில் (தென்பகுதிகளில்) நியமிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை நல்லுறவு அடிப்படையில் அரசாங்கத்தைஎடுக்க வைப்பதுநமது தலைவர்களது தலையாய கடமையாகும். இதனால் வேலையற்ற தகுதிவாய்ந்த நம் வாலிபர்கள் பலருக்கு வேலை கிடைப்பதற்கும் ஏதுவாகும். அத்துடன் ஒருவரை ஒருவர் நேரடியாகப் புரிந்து சகோதரத்துவத்துடன் இனவேறுபாடோ மொழித்துவேஷமோ பாராட்டாது தேசிய ஐக்கியத்தை மேலும் வளர்ப்பதற்கு உதவும்.

ஜெ. பாலசண்முகதேவன்,

வேலணை

ஃ ஃ ஃ

## தீண்டாமை

தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசியல் கட்சிகளாலும், சட்டத்தாலும் புரட்சியினாலும் வேறு எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையினாலும் நீக்கமுடியாது. மாறாக விபரீத விளைவுகளை அது உண்டாக்கக்கூடும்.

தீண்டாமையை எதிர்ப்பவர்களில் பலர் நாஸ்திகவாதிகள். இவர்களால் தீண்டாமையை கடைசி வரையில் நீக்கமுடியாது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றும் அநேக கோவில்கள் ஹரிஜனங்களுக்காகத் திறந்துவிட்ட பின்னரும் அங்குவணக்கத்திற்குச் செல்லும் ஹரிஜன மக்கள் மிகக் குறைவு. சமீபத்தில் உள்ளவர்கள்கூட செல்வதில்லை. காந்தியடிகள் தீண்டாமையைஒழிக்கும் சமயத்தில் மது ஒழிப்பையும் அமுல் நடத்தியதுபோல்இங்கும் மதுஒழிப்பு அமுலுக்கு வரவேண்டும். மதம் மாறியவர்களும் மதநம்பிக்கை அற்றவர்களும் சைவசமயத்தில் திருத்தம் செய்யவோ நடவடிக்கை எடுக்கவோ அருகதை அற்றவர்கள். உதாரணமாக இந்திய அரசியலில் ஹரிஜனத் தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட ஓர் கிறிஸ்தவருடைய அங்கத்துவம் உயர் நீதிமன்றத்தில் நிராகரிக்கப் பட்டிருக்கின்றது. முக்கியமாக மதுஒழிப்பும் ஹரிஜனங்களுக்குள்உள்ள வேறுபாடு நீக்கப்பட்டால் தீண்டாமை தானாகவே நீங்கும்.

சி. சண்முகராஜா,

யாழ்ப்பாணம்.

# சிறுதீவாகும் நெடுந்தீவு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் போக மிகுதியாகஇங்கிருக்கும் மக்கள் உபசரிப்பில் முதன்மை பெற்றவர்கள் என்பது அங்கு சென்று திரும்பும் எவரும் பெறும் அருமையான அனுபவமாக இருக்கும். ‘வாருங்க வாருங்க’ என அவர்கள் கொடுக்கும் வரவழைப்பு எவரது இதயத்திலும் பசுமையாக நிலைத்து நிற்கும் ஓர் இனிமையான அனுபவமாக இருக்கும்.

நெடுந்தீவின் ஜனத்தொகை மட்டும் குறைந்து வரவில்லை. நெடுந்தீவின் விஸ்தீரணமே இப்போது குறைந்து வருகிறது. கிழக்குக் கரையோரத்தில் சிறிய பகுதி கடலில் மூழ்கியுள்ளது. ஆம், சுமார் 400யார் பகுதியை கடல் கொண்டு விட்டதாம்!

இதனையெல்லாம்பொருட்படுத்தாமல் அங்குள்ள மக்கள் சுறுசுறுப்பாகத் தமது வேலையில் மூழ்கியிருப்பது உழைப்பின் உயர்வை எடுத்துக்காட்டுகிறது. நெடுந்தீவு நடுப்பகுதியில் காளாமுனை எனுமிடத்தில் இப்பகுதி மக்கள் 90 யார் நீளமுள்ள பாலமொன்றை சிரமதான மூலம் அமைத்துள்ளார்கள். இங்குள்ள மக்களின்உழைப்பின் ஆற்றல் பாலத்தை மேலும் பலப்படுத்தி நீளச்செய்ய உதவிக்கொண்டிருக்கிறது. காளான்முனைக் கடற்கரை ஓரத்திலிருந்து கற்கள் தோண்டி எடுக்கப்பட்டு இந்தப்பாலம் அமைக்கப்படுகிறது. இந்த முயற்சி பூர்த்தியாக்கப்பட்டு விட்டால்வள்ளங்களைக்கொண்டு வந்து கட்டுவதற்கு நல்ல தொரு துறைமுகமாகவும் இது அமையுமென இங்குள்ளவர்கள் பெருமைப்படு

சொல்லிக் கொள்கிறார்கள்:

### நோயாளர் குறைந்த ஆஸபத்திரி

நெடுந்தீவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் குறைவாகவே காணப்படுகிறார்கள். ஆஸ்பத்திரியில் இருப்பவர்கள் கூட ஏதோ ஒரு வேலையைச் செய்து கொண்டு தானிருப்பார்கள். கர்ப்பிணிகள்கூட பெட்டி இழைப்பதுபோன்ற கைப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டு நேரத்தை உபயோகமாக்கிக் கொண்டிருப்பதை அங்கு செல்பவர்கள் காணலாம். இப்படிப்பட்டவர்களின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகள் சுறுசுறுப்பில் குறைந்தவர்களாகவா இருப்பார்கள்? இங்கிருக்கும் பாடசாலைகளுள் பெரிய பாடசாலையாக இருக்கும் மகா வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்கள் பணிவும் அடக்கமும் கொண்டு குருவின் சொற்கேட்டு நடக்கும் குணக்குன்றுகளாக வளர்கிறார்கள். இந்து கிறிஸ்தவ மதங்களைச்சேர்ந்த மாணவர்கள் பயிலும் இந்த மகா வித்தியாலயத்தில் சமய சமரசமும் வளர்கிறது.

### கற்கோட்டை

அரசினர் ஆஸ்பத்திரிக்குப்பின்னால்தான் டச்சுக்காரர்களின் கற்கோட்டை சிதைந்த நிலையில் சரித்திரத்தின் சில நினைவுகளை நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறது. கோட்டையின் மேல் புல் பூண்டுகள் நன்கு வளர்ந்துஅதனை மறைக்கமுயன்றுகொண்டிருக்கின்றன. இங்குள்ள கிராமசபையோ அரசாங்கமோ இது பற்றிச் சிறிது அக்கறை காட்டினால் உல்லாசப் பிரயாணிகள் வரக்கூடிய ஓர் இடமாக இதைச் செய்துவிடலாம்.

உல்லாசப் பிரயாணிகள் நன்கு ரசிக்கக்கூடிய மற்றொரு இடமுமுண்டு. நெடுந்தீவில் சனசந்தடியற்ற ஒரு பிரதேசத்தில் எதேச்சையாக ஓடித்திரியும் குதிரைக் கூட்டம்தான் அது. சிறிது கலைத்துவிட்டதும் பாய்ந்து பாய்ந்து அவை ஓடும்காட்சி அழகான காட்சிதான். வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமெனக் குரல் எழுப்புபவர்கள் இங்கு தேய்ந்து கொண்டிருக்கும் இந்த இனத்தைப்பாதுகாக்க ஏதேனும் செய்யலாம்.

பிரயாணக்கஷ்டம் இருந்தாலும் நல்லதொருஓய்வை நல்லபடியாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புபவர்களுக்கு நெடுந்தீவு சிறந்த இடம்.

— கணேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறு உடைத்த வழக்கு
## எதிரியின் வாக்குறுதியின் பேரில் விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

நாங்கள் உடைத்த கிணற்றை திருப்பி கட்டிக்கொடுப்பதாக எதிரி கொடுத்த வாக்குறுதியைத் தொடர்ந்து வழக்கு விசாரணையொன்று பின் போடப்பட்டது.

கரையூர் பொலிஸார் முன்னிலையில் கிணறுதிருத்தும் வேலை நடைபெற வேண்டுமென்றும், மீண்டும் அடுத்த மாதம் 12-ம் தேதி ஆஜராகும்படியும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில்சங்கிலிராசா வலவியான செபமாலை செபஸ்தியாம்பிள்ளை மத்தியூஸ் ஜேசுதாசன், ஆனந்தம், மதலேனு ஆகியோர் ரூபாய் செலஸ்டீனுவிற்குச் சொந்தமான கிணற்றை, அலவாங்கு, மண்வெட்டி கொண்டு உடைத்து பாவிக்கமுடியாத விதத்தில் நஷ்டம் விளைவித்ததாகவும், 1-ம் எதிரி செலஸ்டீனு மீது பலாத்காரம் பாவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது 1-ம் எதிரிசார்பில் புறக்டர் ஆர். விஸ்வநாதனும், மற்றைய எதிரிகள் சார்பில் புறக்டர் இராசையாவும் ஆஜராஞர்கள். வழக்காளிசார்பில் கரையூர் பொலிஸாருடன் புறக்டர் எஸ். சி. கதிரவேலு புறக்டர் ஏ. அன்ரனி ஆகியோர் ஆஜராஞர்கள். விசாரணையின்போது 1-ம்எதிரிகொடுத்தவாக்குறுதியைத் தொடர்ந்து விசாரணை பின் போடப்பட்டது.

## பெற்றூர் தினவிழா

திருநெல்வேலி, செவ்.

"மனிதவாழ்க்கைக்குக் கல்வியும் விளையாட்டும் இன்றியமையாதன. அவைகளைக் கற்றுக் கொள்ள உரிய பருவம் மாணவப் பராயமே. இப்பாடசாலை உடுவில் தொகுதியிலுள்ள பாடசாலைகளுள் கல்வியிலும், விளையாட்டிலும் உயர்ந்த ஸ்தானத்தை அடைவதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்"

என்று ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் பெற்றோர் தினவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பிள்ளைகள் நல்ல பழக்க வழக்கங்களைப் பழகிக்கொள்ள பாடசாலைகளே உரிய இடமாகும் என்றும் இதனைப் பெற்றோர் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. சூசைப்பிள்ளை பாடசாலை அறிக்கையைச் சமர்ப்பித்தார். வண. சவரிமுத்து அடிகள், திரு. அழகையா ஆகியோரும் பேசினர்கள்.

## திருட்டு முயற்சி

மாவிட்டபுரம், செவ்.

மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலையில் திருட்டுமுயற்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

அலுமினியத் தொழிற்சாலைப் பணப்பெட்டியை சுமார் 30 அடி தூரத்துக்கு அகற்றும் முயற்சி நடைபெற்றிருப்பதாகவும் காங்கேசன்துறைப் பொலிசில் புகார்செய்யப்பட்டிருக்கிறது

பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். வி. மூர்த்தி விசாரணை நடத்தி வருகிறார். கொழும்பில் இருந்து வருவிக்கப்பட்ட விரல்அடையாள நிபுணர்கள் பணப்பெட்டியில் இருந்த கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்துள்ளனர்.

## கூட்டுறவு முறையில் சிற்றுண்டிச்சாலை

அத்தனகல, செவ்வாய்

வியாங்கொடையிலுள்ள தேசிய நெசவுநிலைய கூட்டுறவு ஸ்தாபனத்தில் கூட்டுறவு முறையில் சிற்றுண்டிச்சாலையொன்றை ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒருவர் பத்துரூபா கொடுத்து ஒரு பங்கைப் பெற்றுக் கொள்ளலாமாம்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# குமாஸ்தாக்கள் புதைபொருள் ஆராய்ச்சி நடாத்துகின்றனர்
## தகைமை பெற்றவருக்கு இலாகாவில் வேலையில்லை

கொழும்பு, புதன்

புதைபொருள் பற்றிய ஆராய்ச்சிகள் தற்பொழுது புதை பொருள் இலாகாவில் வேலைசெய்யும் குமாஸ்தாக்களினுலும் வேலையாட்களினுலுமே மேற் கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது

அண்மையில் நடைபெற்ற மகாநாடொன்றில் இவ்விஷயம் புதை பொருள் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. புதை பொருள் பற்றி ஆராய்ந்து மூன்று வருடப் பயிற்சி பெற்ற உதவி அதிகாரியொருவர் இவ் இலாகாவில் வேலையில்லாது இருப்பதாகவும் அதே வேலையில் ஆராய்ச்சி வேலைகள் சாதாரண வேலையாட்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் குருநாகலைப் பகுதிக்கு ஆராய்ச்சி சம்பந்தமாக விஜயம் செய்த குமாஸ்தா ஒருவர் புதைபொருள் ஆராச்சி நடாத்துவதற்கு அயலில் உள்ள ஒரு ஏக்கர் காணியை அரசாங்கம் பெற்று கொள்ள வேண்டுமென்ற சிபார்சை புதைபொருள் பகுதி அதிகாரி ஏற்று நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. இது சம்பந்தமாக இலாகாவில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருவதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸ

## பதவி உயர்வுப் பரீட்சை
### நால்வருக்கு அழைப்பு

திருநெல்வேலி, புதன்

உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் பதவி உயர்வுக்காக நேற்றைய தினம் பதவி உயர்வுச் சபையினரால் கொழும்பில் நடாத்தப்பட்ட பரீட்சைக்கு வட மாகாணத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டரான திரு. வி. கே. கந்தையா, யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை, காங்கேசன்துறை தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி, மன்னர் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயதிலகா ஆகியோரே மேற்படி பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த நால்வருமாவர்.

## நியமனம்

சங்கானை, செவ்.

சங்கானை மதுவரிப்பாவனை இலாகாவில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட மேலதிகாரியின் இடத்திற்கு திரு. ரி. ரெங்கநாதன் தற்காலிகப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அரசாங்க ஊழியருக்கு பயிற்சி

கொழும்பு, புதன்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக முறைகளில் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் விரைவில் நிர்வாக கல்லூரி யொன்றை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளது.

இக்கல்லூரியில் நிர்வாக ஒழுங்கு முறைகளிலும் விதிகளிலும் முதலில் பயிற்சி அளிக்கப்படுமெனவும் பின்னர் கருத்தரங்கங்கள் மூலம் உத்தியோகஸ்தர்களின் அறிவு விருத்தி செய்யப்படுமெனவும் தெரிய வருகிறது.

பயிற்சி முடிந்த பின்னர் உத்தியோகத்தர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

## "மாணவரின் பொறுப்புகள்"

உடுப்பிட்டி, செவ்.

"நாட்டின் முன்னேற்றம் மாணவர் கையில்தான் தங்கியுள்ளது. மாணவர்களின் முன்னேற்றத்தில் ஆசிரியர்கள் அக்கறை கொண்டால் மாத்திரம் போதாது. பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் அதிக அக்கறை கொள்ள வேண்டும்" என்று கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க மாநாந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்த தலைமையாசிரியர் திரு. சு. வே. கந்தையா பேசுகையில் கூறினர்.


# கிரீக்கோ சூப்பர் கோப்பி

## கொழும்பு ஜோன் கிரின் அன்ட் கம்பனியாரின்
### உற்பத்தி

கவர்ச்சியூட்டும் பைக்கற்றுகள்! அதி நறுமணம் கொண்டது!
மறக்கவே முடியாத ருசியுடையது! நிதான விலை!

கொழும்பில் உள்ள கிரீக்கோ கைத்தொழில் நிலயத்தில்
விசேஷ தயாரிப்பு முறைகளைக் கையாண்டு வறுத்து அரைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

**M. M. T. P.**

142, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கல்லூரியின் சிறப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள நுவரேலியா பரிசுத்த டிரினிட்டி கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ். மத்திய கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான ஆட்டத்தில் மத்தியகல்லூரி நுவரேலியாவைத் தோற்கடித்தது.

டிரினிட்டி கல்லூரி முதல் முறையாக இவ்வருடமே ஒரு உதைபந்தாட்டக்கோஷ்டியை உருவாக்கி முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்து யாழ். மத்திய கல்லூரியுடன் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் இருகோஷ்டிகளும் பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்டன. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் 15 நிமிடங்கள் வரையும் ரசிகர்கள் எதிர்பார்த்தது ஒன்று நடக்கவில்லை, பந்து மின்னல் வேகத்தில் 'பறந்து' திரிந்தது. மத்திய கல்லூரியின் முன்னணி வீரர் புவனேந்திரன் முதலாவது கோலைப் போட்டார். நுவரேலியாவின் 'காப்டன்' ராஜவேல், மனோகரன், தேசநாதன் ஆகியோர் வேகமான போட்டித் தீவிரமாக ஆடினர்.

இடைவேளைக்குப் பின்னர் மத்தியகல்லூரியின் சண்முகலிங்கம், புரட்சிதாசன், அல்லின் ஆகியோரின் ஆட்டம் அருமையாக இருந்தது. மத்திய கல்லூரியின் வலது முன்னணி வீரர் அல்லினின் துணையுடன் புவனேந்திரன் மேலும் ஒரு கோலை விளாசினார். நுவரேலியா விட்டுக் கொடுக்காமல் அலைஅலையாக வந்து மோதியது. சாள்ஸ், ஆரோக்கியசாமி, கார்மேகம், ஆரியரத்ன, பழனி ஆண்டி, கோபாலகிருஷ்ணன், கோல்காப்பாளர் அருள்ராஜ் ஆகியோர் சிறப்பாக விளையாடினர். இப்போட்டிமுடிவில் மத்தியகல்லூரி 2-0 கோல்களால் நுவரேலியாவை வெற்றியீட்டியது. மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## வேலணைக்கு வெற்றி

ஊர்காவற்றுறை, செவ்

வேலணை அரசினர் மத்திய கல்லூரிக்கும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குமிடையே வேலணை மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இரண்டாவது பிரிவில் வேலணை மத்தியகல்லூரி 2-1 கோலால் வெற்றியீட்டியது. மூன்றாவது பிரிவுக்கான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரு கல்லூரிகளும் தலா 2 கோல்கள் போட்டன.

---

கொழும்பு, செவ்.

பாடசாலைகளில் மாணவ ஆசிரியர் நியமனம் அவ்வளவு வெற்றி அளிக்காத திட்டமாக இருப்பதாக கல்வி இலாகா அதிகாரிகளில் அதிகமானோர் கருத்து வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது

## ஒலிம்பிக் கோஷ்டி வெற்றி

உடுவில், செவ்

தெல்லிப்பழை ஒலிம்பிக் கோஷ்டிக்கும், வல்வெட்டித்துறைபுளூஸ்கோஷ்டிக்குமிடையே யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் ஒலிம்பிக் கோஷ்டி வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பமாகிய பதினைந்தாவது நிமிடங்களில் புளூஸ் கோஷ்டியினர் ஒருகோலைப் போட்டனர். இதன்பின் ஒலிம்பிக் வீரர்கள் இரண்டுகோல்களை விளாசினர்.

இடைநேரத்தின்பின் ஆட்டம் விறுவிறுப்படையத் தொடங்கியது.

போட்டி தொடங்கிய சிறிதுநேரத்தில் புளூஸ் கோஷ்டி வலது முன்னணி வீரர் அமீர் ஒருகோலை அடித்து கோல் எண்ணிக்கையைச் சமனாக்கினார். இதன்பின் இரு பகுதியாருக்குமிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. ஒலிம்பிக் கோஷ்டிவீரர் ஆனந்தகுமாரசாமி ஒருகோலைப் போட்டார். புளூஸ் கோஷ்டியினரும் விட்டுக்கொடுக்காது அடுத்து ஒரு கோலை போட்டுக்கொண்டனர்.

போட்டி முடியும் கட்டத்தில் விளையாட்டு மிகவும் ரசிக்கக்கூடியதாக இருந்தது. கடைசி நேரத்தில் ஒலிம்பிக் வீரர்களுக்கு ஒரு "பெனல்டி" கிடைத்தது. இப்போட்டியைச் சேர்ந்த சிவராசா என்பவர் அப் பெனல்டியைப் பயன்படுத்தி கோலாக்கினார். புளூஸ் முன்னணி வீரர்கள் கோல்களைப் போட எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் அவை ஒலிம்பிக்வீரர்களால் முறியடிக்கப்பட்டன.

கடும்மழையினூடே நடைபெற்ற இப்போட்டியின் இறுதியில் 4-3 கோல்களால் ஒலிம்பிக் கோஷ்டி வெற்றிபெற்றது. திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

---

## தலைமறைவு நபர் பிணையில் அனுமதி

வல்வெட்டித்துறை, திங்

புலோலியில் சிலநாட்களுக்குமுன்னர் இரவுவேளையில் ஒருவீட்டில் திருடமுயற்சித்து பொலிசாருக்குத் தலைமறைவாக திரிந்த சின்னத்தம்பி சபாரத்தினம் என்பவரை பருத்தித்துறைப் பொலிசார் பருத்தித்துறை சந்தையில் கைது செய்து பதில்நீதிபதி திரு. கே. இரத்தினசிங்கம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது நீதிபதி அந்நபரை 200 ரூபா பிணையில் செல்லுமாறும் அடுத்தமாதம் 8ந் திகதி மீண்டும் கோட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார்.

---

## கதாப்பிரசங்கம்

உடுப்பிட்டி, செவ்

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு "முருகன் திரு அவதாரம்" பற்றி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கதாகாலாசேஷபம் நிகழ்த்தினார்.

குத்துச்சண்டை

## பிரிட்டிஷ் சாம்பியன் காலமானர்

இலண்டன், நவ. 15

பிரிட்டிஷ் அதிபார குத்துச் சண்டை சாம்பியன் ஜக்கல் டெர்லூட் நேற்றுக்காலமானார்.

நேற்றுஇரவு அவர்சென்று கொண்டிருந்த கார் மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அவர் மரணமானார்.

## பாதை சீர்கேடு

கொத்மலை, செவ்வாய்

நாவலப்பிட்டியிலிருந்து இஸ்வல்லை வழியாக ரொஜசிங்கம என்ற இடத்திற்குச் செல்லும் பஸ் நிலையிலிருந்து ரொஜசிங்கமையை அடையும் வரைக்கும் மிகுந்த 'கஷ்டத்துடன்' செல்லவேண்டிய நிலையில் இருக்கின்றது. பாதையின் சீர்கேடே இதற்குக் காரணமாகும்.

# "ஈழநாடு" சைக்கிள் ஓட்டப் போட்டி

'ஈழநாடு' பத்திரிகையின் ஆதரவில் நடைபெறவிருக்கும் பி. எஸ். ஏ. சைக்கிள் பந்தய ஓட்டம் 1967 ம் ஆண்டு ஜனவரி முதல்தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். 18 வயதுக்குட்பட்டவர்களுக்கும், வயதுவந்தவர்களுக்கும் என இரு ஓட்டங்கள் உண்டு. இந்த ஓட்டங்களில் முதலாம் இடத்தைப் பெறுபவர்களுக்கு பி. எஸ். ஏ. சைக்கிள் பரிசாக வழங்கப்படும். வேறு பரிசுகளும் உண்டு.

'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் கூப்பன்களில் மட்டும்தான், பந்தயங்களில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். அத்துடன் பி. எஸ். ஏ. சைக்கிள் மட்டும்தான் இந்தப்பந்தய ஓட்டங்களில் பங்கு பெற முடியும் என்பதையும் வாசகர்களுக்கு அறிவிக்கிறோம்.

விபரங்களுக்கு: 'ஈழநாடு' பத்திரிகையைப் படியுங்கள். கூப்பன்கள் வெகு விரைவில் எமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## விபரங்கள்

ஜனவரி 1, 1967 — பி. ப. 4-00 மணி

### முதலாவது ஓட்டப் பந்தயம்
### மாணவர் போட்டி

ஐந்து மைல் - யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | கிரிக்கெட் மட்டை |

ஜனவரி 1, 1967 — பி. ப. 4-30 மணி

### இரண்டாவது ஓட்டப் பந்தயம்
### வயது வந்தோர் போட்டி

பத்து மைல் - யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | தூய வெண்கலத் தட்டு (ட்ரே) |

## விதிகளும் நிபந்தனைகளும்

### முதலாவது ஓட்டப்பந்தயம்

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதி உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
3. 'ஈழநாட்டில்' வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ். ஏ. சைக்கிளிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: டிசம்பர் 15, 1966.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
7. ஓட்டப் பந்தய முடிவுக்குப் பின் எவ்வித கடிதத் தொடர்பையும் 'ஈழநாடு' ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

### இரண்டாவது ஓட்டப் பந்தயம்

இதில் கலந்து கொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி, முதலாவது ஓட்டப் பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப் பந்தயத்துக்கும் உரியனவாகும்.

மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ.
கோல்டின் டி லக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு
ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கம்யூனிஸத்துக்காக ரஷ்யா உதவி அளிக்கவில்லை"

## குரும்பசிட்டியில் அநுராதபுரம் எம். பி. விளக்கம்

குரும்பசிட்டி, செவ்வாய் "1956ம் ஆண்டு ஆட்சியிலிருந்த பண்டாரநாயக்கா அரசாங்கம் சோவியத் நாட்டுடன் ராஜீயத் தொடர்பை மட்டுமல்லாது வர்த்தக, பொருளாதார, கலாச்சார உறவுகளையும் ஏற்படுத்தியது. இலங்கைமக்களாகிய நாம் சோவியத் மக்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருக்கிறோம். ஆசிய-ஆபிரிக்க மக்களுக்கும் நம் தேசத்தவர்களுக்கும், பொது எதிரி ஏகாதிபத்தியவாதிகள்.

இவ்வாறு அநுராதபுரம் எம். பி. திரு. கே. பி. ரத்நாயக்கா (ஸ்ரீ. ல. சு. க.) குரும்பசிட்டியில் நடைபெற்றபொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

குரும்பசிட்டியில் சோவியத் யூனியனின் 49 வது தேசிய தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. ரத்நாயக்கா மேலும் குறிப்பிட்டதாவது:-

"ஆசிய-ஆபிரிக்க மக்களின் வாழ்க்கை புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பலகாலமாக ஏகாதிபத்தியவாதிகளின் தனிச் சொத்துக்களாக இருந்த பல நாடுகள் இன்று உலகத்தையே மாற்றிவருகின்றன. இதனால் உலகநாடுகளின் கவனம் இத் தேசங்கள் மீது திரும்பியுள்ளது. இலங்கை தனது வெளிநாட்டுக்கொள்கையில் உலக நாடுகளின் மதிப்பைப் பெற்றுள்ளது. இலங்கையின் குரலை மற்றைய தேசங்கள் வெகு கவனமாக அவதானித்து, அதன் சிறப்பை மெச்சுகின்றன. அடிமைப்பட்டுள்ள நாடுகள் விடுதலைபெறப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்றன. இவ்வகைப் போராட்டத்திற்கு சோஷலிஸ தேசங்களினதும் தொழிலாள வர்க்கத்தினரதும் ஆதரவும் உதவியும் எப்போதும் வழங்கப்படுகிறது.

சோவியத் புதிதாக சுதந்திரம் பெற்ற பின்தங்கிய நாடுகளுக்கு உதவி அளிக்கிறது. இவ்வகையில் இலங்கைக்கு பண்டாரநாயக்கா அரசாங்காலத்தில் 4கோடி ரூபா செலவில் உருக்கு ஆலை, 2 கோடிரூபா ரயர்-ரியூப் உற்பத்திச்சாலை, 50 லட்சம் ரூபா துறைமுக அபிவிருத்திவேலை, 1 கோடி ரூபாவுக்கு கோதுமை மா ஆலை உட்பட பெற்றோலிய விநியோகத்தையும் உதவியாகக் கொடுக்க முன்வந்தது.

அரசியல் கொள்கை எவ்வாறாயினும், கம்யூனிஸம், சோஷலிஸம் என்ற பாகுபாடுகளைக் கவனியாது அரசியல் கலப்பு அற்ற முறையில் இலங்கை பொருளாதார, கலாச்சார உறவுகளை சோவியத்துடன் மேற்கொண்டுள்ளது. ஆனால் மற்றைய நாடுகள் இலவற்றின் உதவிகளைப்பெற முன்னைய காலங்களில் இலங்கை சில சலுகைகள், நிபந்தனைகள் செய்யவேண்டி இருந்தது. இலங்கை கம்யூனிஸ பாதையில் செல்லவேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் சோவியத் உதவிகளைத் தரவில்லை. கம்யூனிஸ பாதையில் செல்லவில்லை என்ற காரணத்தால் உதவிகளைத் தடை செய்யவும் இல்லை. இருநாடுகளுக்குமதியிலும் சிறந்த உறவை ஏற்படுத்த கலாச்சார சங்கங்கள் திறவப்படவேண்டும்."


### நிருபர்கள் தேவை

'ஈழநாடு' பத்திரிகைக்கு பின்வரும் இடங்களில் செய்திநிருபர்கள் தேவை. பத்திரிகை அனுபவமுள்ளவர்களும் கல்வித் தராதரமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி, செய்திஆசிரியர் "ஈழநாடு" த. பெ. எண் 49 யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு
அக்கரைப்பற்று
பொத்துவில்
வாழைச்சேனை
ஏறூவூர்
சிலாபம்
நீர்கொழும்பு
குருநாகல்
பொல்காவலை
கொட்டாஞ்சேனை
வெள்ளவத்தை
கொம்பனித்தெரு



### மரண அறிவித்தல்

புங்குடுதீவு மேற்கு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர் சண்முகம் நடராசா, திருமதி யோகம்மா ஆகியோரது அருமை மகனும், பரஞ்சோதி, நவமணிதேவி, ஜெகநாதன், நளாயினி ஆகியோரின் அருமைச் சகோதரருமாகிய புங்குடுதீவு மகாவித்தியாலைய மாணவன் யோகநாதன் (ரஞ்சி) காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் 16-11-66 காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கேரதீவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

ச. நடராசா.


### எம். பி.யின் ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன் கோப்பாய் தொகுதி பாடசாலை பஸ் சேவை பள்ளிச் சிறுவர்களுக்கு ஏற்றமுறையில்இருப்பதற்கு கோப்பாய் எம். பி, இ. போ. ச. மாவட்ட மனேஜருக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

காலை எட்டுமணிக்கு அச்சுவேலி, தோப்பு, நவக்கிரி ஊடாக புத்தூருக்கும், மாலை 3-30 மணிக்கு புத்தூர், நவக்கிரி, தோப்பு, அச்சுவேலி ஊடாகவும் பஸ் சேவையை நடாத்துமாறு கோப்பாய் எம். பி. தமது ஆலோசனையில் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

### ஜெயப்பிரகாஷ்

யாழ்ப்பாணம், புதன் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த இந்திய சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தமது விஜயத்தை மீண்டும் ஒத்திவைத்திருப்பதாக அறியப்படுகிறது.

### துணிகரத் திருட்டு

உடுப்பிட்டி, செவ். காரணவாய் தெற்கில், ஐ. வடிவேலு என்பவரின் வீட்டில் நேற்று நள்ளிரவு துணிகரத் திருட்டு நடைபெற்றது. பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன. பருத்தித்துறை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

குத்துச்சண்டைப்போட்டி

# சாம்பியன் கிளேயிடம் வில்லியம்ஸ் தோல்வி

## மூன்றுவது சுற்றில் கீழே விழுந்தார்

ஹவுஸ்டன் (டெக்ஸாஸ்), நவ. 15 நேற்றிரவு (இலங்கை நேரப்படி இன்று காலை) இங்கு நடைபெற்ற உலக அதிகார குத்துச்சண்டை சாம்பியன் சவால் போட்டியில் ஹவுஸ்டன் வீரர் கிளிவ்லேண்ட் வில்லியம்ஸை (33 வயது) காஸியஸ் கிளே (24 வயது) தோற்கடித்தார்.

உலக அதிகார குத்துச் சண்டை சாம்பியன் போட்டியில் காஸியஸ்கிளே இப்பொழுது மீண்டும் வெற்றி பெற்றிருப்பதன்மூலம் அவர் தமது 'உலகசாம்பியன்'' பட்டத்தைக் காப்பாற்றிக் கொண்டுள்ளார்.

போட்டி ஆரம்பமாகி மூன்றுவது சுற்றில் சவால் வீரர் கிளிவ்லேண்ட் வில்லியம்ஸை காஸியஸ் கிளே, கீழே வீழ்த்தி வெற்றி கண்டார்.

### சத்தியாக்கிரக :....

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சுமார் எட்டுமணிவரை நடைபெற்றது.

"ஜாதிப்பாகுபாடு என்னும் கொடுமை ஒழிக்கப் படவேண்டுமென்பதில் இரு தரப்பினருக்குமிடையில் கருத்துவேற்றுமை கிடையாது. ஆனால் இதை எந்த முறையில் ஒழிப்பது என்பதில் தான் கருத்து வேற்றுமை இருக்கிறது. இன்றுள்ள நிலையில் சிறுபான்மைத் தமிழர்மட்டும் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பித்து அதன் மூலம் இக்கொடுமையை ஒழிக்கலாம் என முன்வருவது நன்மையளிக்குமெனத் தோன்றவில்லை. சமூகமான முறையில், நல்ல சூழ்நிலையை உருவாக்கி, சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீண்டாமையை ஒழிக்கவேண்டும். இதற்கான முயற்சிகளைத்தான் மேற்கொள்ளவேண்டும். அதுவே நன்மையளிக்கும் என்று கருதுகிறோம்" என்று திரு. வி. என். நவரத்தினம் பின்னர் தமது நிருபரிடம் தெரிவித்தார்.

தீண்டாமையை ஒழிக்க தமிழரசுக்கட்சியும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக் குழுவும் இதுவரை எடுத்துவந்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் நேற்றைய பேச்சுவார்த்தைகளில் எடுத்துக் கூறப்பட்டதாகவும் இனி எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் கூறப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

பேச்சுவார்த்தைகள் இன்று தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

### மின்சார ஊழியர் பற்றி பேச்சு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் மாநகரசபை மின்சார ஊழியர் பன்னிரண்டுபேர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக அந்த ஊழியர் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய ஊழியர் சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதி திரு. த. குணரத்தினம் மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ். நடேசனை நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். பூர்வாங்கமாக நடைபெற்ற இப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நாளை வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.


### பிறந்ததின விழா

சின்னப்பு தேவதிரவியம், திருமதி இராசம் தேவதிரவியம் ஆகியோரின் அருமைப் புதல்வன் ஜெயராட்டின் முதலாவதுபிறந்தினத்தை இன்று கொண்டாடுகிறோம். உறவினர்களும், நண்பர்களும் விழாவில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இங்ஙனம் சின்னப்பு தேவதிரவியம், வேதக்கோயிலடி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 1162

### மரண அறிவித்தல்

சிவகாமிப்பிள்ளையின் அருமைக்கணவரும், வீரசிங்கம் (சுப்பிறின்ரெண்டன் மின்சார நிலையம் காங்கேசன்துறை), நல்லம்மா, கனகலட்சுமி ஆகியோரின் தகப்பனுரும் இ. செல்லத்துரை (மலாயன் பென்சனியர்), சி. க. சபாபதி (சீமெந்து தொழிற்சாலை சிறுப்பர்) ஆகியோரின் மாமனுரும், சு. துரையப்பா, அன்னம்மா காலம் சென்ற செல்லையா, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரருமான சுப்பிரமணியம் மார்க்கண்டு காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று புதன்கிழமை நெட்டிலப்பாய் சோண்டாங்கி இல்லத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு கரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். தகவல்: மா. வீரசிங்கம்.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆசிரியர் வை. ஏரம்பமூர்த்தி அவர்களின் தாயார் திருமதி. வை. நா. பத்மாவதி காலமானுர். அன்னாரின்பூதவுடல் சமக்கிரியைகளுக்காக இன்று (16-11-66 புதன்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 167, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். 1164


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# பெண் பிள்ளைகளுக்கு நெசவுப் பயிற்சி

பட்டு, பருத்தி நெசவுத் தொழிலில் பயிற்சி பெற விரும்பும் பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

நிபந்தனைகள்: 1. பிள்ளைகள் 14 வயதுக்கு மேற்பட்டவர்களாயும் 6-ம் வகுப்பில் சித்திபெற்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.
2. பயிற்றப்பட்டவர்கள் எமது தொழிற்சாலையில் கடமையாற்றக் கடமைப்பட்டவர்களாய் இருப்பார்கள்.

தொழிற்சாலையிலேயே தங்க விரும்பும் பிள்ளைகளுக்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

பயிற்சி பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.

அதிபர்:

## சீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

பலாலி வீதி — திருநெல்வேலி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org